சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 677 / 2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் எ.ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 05.10.2023-ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | நவீன் | கிராமம : | |
| த/பெ : | செல்லையா | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

<u>முதல் விசாரணை</u>

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணம் தாக்கல் செய்கிறேன்.

1) விபத்து பதிவேடு நகல் - எ.ம.சா-ஆ.1

2) குற்ற இறுதியறிக்கை இணையதள நகல் - எம.சா.ஆ.2

மேற்படி எ.ம.சா.ஆ.1 ஆவணம் மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்று மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் எ.ம.சா-ஆ.1 ஆவணத்தில் மனுதாரரை மருத்துவர் பரிசோதித்த போது அவரிடம் இருந்து மது வாடை வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 08.07.2019 இரவு 10.30 மணி ஆகும். மது வாடை என்பதும் under the influence of alchohal என்பதும் வேறுபட்டது என்றால் சரிதான். Alchohal Smell என்னென்ன காரணங்களால் வரும் என்பது எனக்கு தெரியும். மனுதாரர் மருந்து மாத்திரை எடுத்திருந்தாலோ அல்லது புளித்த பானங்களை அருந்தியிருந்தாலோ மது வாடை வர வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மனுதாரர் மருந்து மாத்திரை உட்கொண்டதால் தான் மது வாடை இருந்துள்ளது என்றால் சரியல்ல. மதுவாடையை மட்டும் வைத்து ஒருவர் மது அருந்தியுள்ளார் என முடிவு செய்ய முடியாது என்றால் சரிதான். ம.சா.ஆ-1 ஆவணத்தில் மனுதாரர் under the influence of alchohal என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஒருவர் மது அருந்தியுள்ளாரா இல்லையா என்பதை உறுதிபடுத்த அவருக்கு அவருடைய ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து தான் உறுதி படுத்த முடியும் என்றால் சரிதான். மனுதாரருக்கு ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்ததாக எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில்

குறிப்பு இல்லை என்றால் சரிதான். மனுதாரர் அவர் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளர் மீதும் அதன் காப்பீடு நிறுவனத்தின் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது வாகனத்தை ஓட்டிச்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு முழுமையான காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தைப் பொறுத்து 3ம் நபர் என்றால் சரியல்ல. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் காப்பீடு ஒப்பந்தம் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2 பேர் அமர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்ட வாகனம் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரும் பின்னால் ஒருவரும் அமர்ந்து செல்ல பாலிசி விதிகளின் படி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை பொறுத்து 3ம் நபர் என்பதால் எங்கள் நிறுவனம் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தைப் பொறுத்து 3ம் நபர் என்பதால் விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனத்தை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் தான் மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம் / நவீன்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.